# கற்றல் குறைபாடுகள் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது

லர்னிங் டிஸ்எபிலிட்டீஸ் அசோசியேஷன் ஆஃப் பீல்

உடன் இணைந்து

ரீஜெனல் டைவர்ஸிட்டி ரவுண்ட்டேபிள் ஆஃப் பீல்





## RDR என்பது யார்?

இலாப நோக்கற்ற ஒரு ெ ாண்டு நிறுவனமான, ரீஜெனல் டைவர்ஸிட்டி ரவுண்ட்டேபிள் *(RDR)*, சமமான, சமூக ரீதியாக நியாயமான, கலாச்சார ரீதியாக திறமையான மற்றும் மிகவும் மாறுபட்ட சமூகத்தின் ே வைகளை பூர்த்தி செய்யும், மனி பராமரிப்பு சேவைகளை வழங்கிட, சமூக அமைப்புகள் மற்றும் நிறுவனங்களை பங்கேற்கச் செய்வதில், ஒரு தலைவராக இருப்பதில் உறுதியாக உள்ளது. *RDR* சமூக லைமைத்துவ திட்டத்ன உருவாக்கி, அன அறிமுகப்படுத்தியது, அதன் இரண்டாம் கட்டத்தில், *DEI* அதிகாரத்ன முன்னெடுத்துச் செல்லும் சமூக திட்டங்களை ஒத்துழைப்புடன் வழங்கிட, தற்போது *30* தூதர்கள் மற்றும் *7* பார்ட்னர் அமைப்புகளுடன் பணியாற்றி வருகிறது. இந்த சமூக திட்டங்களானது, பரஸ்பர நன்மை பயக்கும் அர்த்தமுள்ள உரையாடல்கள் மற்றும் செயல்பாடுகள் மூலம், திட்ட பங்கேற்பாளர்களுடன் சமத்துவமும், ஒருங்கிணைப்பையும் ஊக்குவிக்க, ஒவ்வொரு அமைப்பிலிருந்தும் அர்ப்பணிக்கப்பட்ட வழிகாட்டிகளால் ஆ ரிக்கப்படுகிறது. பங்கேற்பாளர்கள் அனைவரும், *OTF*-ஆல் நிதியளிக்கப்படும் இரண்டு ஆண்டு திட்டத்தின் ஒரு பகுதியான, *9* மா பயிற்சி திட்டத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

இந்தக் கையேடானது *LDAPR* நிர்வாக இயக்குநர் மரியா ரியோலின் மற்றும் இத்திட்டத்தை எடுத்து நடத்தும் அமைப்பான *RDR* ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ், *CLP* திட்ட தூதர்கள் மேற்கொள்ளும் திட்ட செயல்பாட்டின் ஒரு பகுதியாகும்.

## யார் இந்த LDAPR?

லர்னிங் டிஸ்எபிலிட்டீஸ் அசோசியேஷன் ஆஃப் பீல் என்பது கற்றல் குறைபாடுகள் உள்ள குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் பெரியவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு இலாப நோக்கற்ற தொண்டு அமைப்பாகும். அதன் வலிமை சமூகத்திலிருந்து வருகிறது, மேலும் குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பங்கள், அவர்கள் வெற்றியடைய தேவையான ஆதரவைப் பெறுவதை உறுதிசெய்ய எங்கள் உறுப்பினர்கள் மற்றும் தன்னார்வலர்களை நாங்கள் நம்புகிறோம்.

கற்றல் குறைபாடுகள் குறித்ததபொது விழிப்புணர்வைதஏற்படுத்தும்த அதேதவேளையில், சிறப்புத்ததிட்டங்கள், பட்டறைகள், ஆதரவு குழுக்கள்த ஆகியவற்றை வழங்குவதன் மூலம், கற்றல் குறைபாடுகள்த உள்ளவர்களுக்கும், அவர்களின்தகுடும்பங்களுக்கும் உதவுவதற்கு, *LDAPR* அதன் பார்ட்னர்களுடன்தஇணைந்துதசெயல்படுகிறது.

நமது சமூகத்தின் ஏராள ஆ ரவுடன், *LDAPR* அமைப்பின் திட்டங்களானது, ே வையுள்ள அனைவரையும் சென்றடைவன உறுதிசெய்திட செயல்பட்டு, அவர்கள் செழித்து வளர உதவி, பீல் பிராந்தியத்திற்குள் உள்ள குடும்பங்களுக்கு வளங்கள் மற்றும் ஆதரவை *LDAPR* வழங்குகின்றது.



‘ஒரு குழந்தை நாம் கற்பிக்கும் வழியில் கற்றுக்கொள்ள முடியாவிட்டால்,

அவர்கள் கற்றுக்கொள்ளும் வழியில் நாம் கற்பிக்க வேண்டும்.”

~ இக்னாசியோ எஸ்ட்ராடா (IGNACIO ESTRADA)

## கற்றல் குறைபாடு என்றால் என்ன?

கற்றல் குறைபாட்டை இவ்வாறு வரையறுக்கலாம்:

ஒத்த வயதுடைய மற்ற குழந்தைகளிடம் எதிர்பார்க்கப்படும் அதே அளவிலான அறிவு மற்றும் திறன்களைப் பெறுவதில் உள்ள சிரமங்களுக்கு வழிவகுக்கும் பலவிதமான கோளாறுகள். இந்தக் குறைபாடுகள், மற்றபடி, சிந்திப்பதற்கும், பகுத்தறிவதற்கும் சராசரி திறன்களுடன் சேர்ந்து, கற்றல் தொடர்பான சிந்தனை செயல்முறைகளில் உள்ள சவால்களால் ஏற்படுகின்றன. கற்றல் குறைபாடுகள் குறிப்பிட்ட வகையிலானது மற்றும் அறிவார்ந்த குறைபாடுகள் என்பதிலிருந்து வேறுபடுகின்றது.

கற்றல் குறைபாடுகள் மரபணு அல்லது உயிரியல் காரணிகளால் ஏற்படுகின்றன. அவை கலாச்சார அல்லது மொழி வேறுபாடுகள், போதிய அறிவுறுத்தல், சமூக-பொருளாதார நிலை அல்லது உந்துதல் இல்லாமை போன்ற காரணிகளால் ஏற்படுவதில்லை. பெரும்பாலும், கற்றல் குறைபாடுகளானது, கவனம், நடத்தை மற்றும் உணர்ச்சிக் கோளாறுகள், புலன்கள் சார்ந்த சவால்கள் அல்லது மற்ற மருத்துவ நிலைமைகள் உள்ளிட்ட பிற நிலைமைகளுடன் சேர்ந்து காணப்படுகின்றன.



## பரவலான கற்றல் குறைபாடுகள்




கற்றல் குறைபாடுகள் தீவிரத்தன்மையில் பரந்த வரம்பில் உள்ளன மற்றும் அவை பின்வரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட முக்கிய திறன்களின் பயன்பாட்டில் தலையிடுகின்றன:

- வாய்வழி மொழி (எ.கா., கேட்பது, பேசுவது, புரிந்துகொள்வது)
- வாசிப்பது (எ.கா., செய்தியை உணர்ந்துகொள்ளுதல், புரிதல்)
- எழுதப்பட்ட மொழி (எ.கா., எழுத்துப்பிழை, எழுதப்பட்ட பதம்)
- கணிதம் (எ.கா., கணக்கிடுதல், கணக்கிற்கு தீர்வு காண்பது)

கற்றல் குறைபாடுகளானது, ஒருங்கிணைக்கும் திறன்கள், சமூக விழிப்புணர்வு மற்றும் சமூக தொடர்பு ஆகியவற்றுடனும் சிரமங்களை ஏற்படுத்தக்கூடும்.

குறைபாடுகள் பொதுவாக வாழ்நாள் முழுவதும் இருக்கும். இருப்பினும், சூழல் மற்றும் தனிநபரின் குணாதிசயங்களைப் பொறுத்து, அவற்றின் விளைவுகள் காலப்போக்கில் வெவ்வேறு விதமாக வெளிப்படுத்தப்படலாம். சில குறைபாடுகள் பள்ளி செல்வதற்கு முந்தைய பருவத்தில் கவனிக்கப்படலாம், மற்றவைகள் நீண்ட காலம் வரை தெரியாமல் போகலாம். பள்ளிப் பருவத்தின் போது, கற்றல் குறைபாடுகளானது, எதிர்பாராத அளவு குறைந்த கல்வி சாதனை அல்லது அதிக அளவு முயற்சி மற்றும் ஆதரவின் மூலம் மட்டுமே சாத்தியமாகும் சாதனைகளால் அறியப்படுகின்றன.

> “கற்றல் குறைபாடுகள் உள்ளவர்கள் நிச்சயமாக, வித்தியாசமாகக் கற்றுக்கொள்கிறார்கள். அப்படியெனில் அவர்கள் கற்றுக்கொள்ளும் விதம் தவறு என்று அர்த்தமா?”
>
> ~ **ஜோஆன் டம்**
>
> **(JOANNE DUMM)**

## கற்றல் குறைபாடுகள் பற்றிய தவறான எண்ணங்கள்



1. கற்றல் குறைபாடுகள் உள்ள குழந்தைகளுக்கு வழங்கப்படும் தனி ஏற்பாடுகள், அவர்களுக்கு நியாயமற்ற ஒப்பீட்டளவு நன்மையை அளிக்கின்றன. அவர்கள் வெறுமனே சமாளிக்க கற்றுக்கொள்ள வேண்டும்.

**உண்மை:**

- அவர்களுக்குத் தேவையான ஏற்பாடுகளை வழங்குவது அவர்கள் வெற்றிபெற தேவையான கருவிகளை உருவாக்க அவர்களுக்கு உதவும்.
- தனி ஏற்பாடுகளானது LD-கள் உள்ளவர்கள் தங்கள் திறனுக்கான மட்டத்தில் வேலை செய்திட அனுமதிக்கின்றன, அவர்களின் குறைபாட்டின் மட்டத்திற்கு அல்ல.

2. கற்றல் குறைபாடுகள் அனைத்தும் ஒரே மாதிரியானவை.

**உண்மை:**

- LD-கள் சிக்கலானவை மற்றும் அவை நபருக்கு நபர் மாறுபடுகின்றன.
- LD-கள் பல வடிவங்களில் வந்து, அனைவரையும் வெவ்வேறு விதமாய் பாதிக்கின்றன.
- LD-க்களின் தாக்கமானது சூழ்நிலையின் தேவைகளைப் பொறுத்து வெவ்வேறு அமைப்புகளில் மாறக்கூடும்.

3. அனைத்து கற்றல் குறைபாடுகளும், பெரியவர்களாகும் போது நீங்கும்.

**உண்மை:**

- பெரும்பாலான சமயங்களில், LD-கள் குழந்தைப் பருவத்தில் காணப்படுகின்றன. முன்னமே தலையீடு செய்யப்படும்போது, அந்தச் சிறுவன், தனது LD-யை நிர்வகிக்க கற்றுக்கொள்ளும் வண்ணம், சமாளிக்கும் திறன்கள் மற்றும் உத்திகளை செயல்படுத்த முடியும்.
- LD-கள் உள்ள பெரியவர்கள் தங்களைச் சுற்றியுள்ள உலகத்தில் சமாளிக்க கற்றுக்கொண்டிருப்பார்கள். அவர்கள் பெரும்பாலும் தாங்கள் கொண்டிருக்கும் கற்றல் குறைபாட்டிற்கு பொருத்தமான வேலைவாய்ப்பை நாடுவார்கள்.

# பெற்றோருக்கான உதவிக்குறிப்புகள்

வெற்றி பெறுவதற்கு, கற்றல் குறைபாடுகள் உள்ளவர்களுக்கு, வீடு, பள்ளி, சமூகம் மற்றும் பணியிட அமைப்புகளில், அவர்களின் தனிப்பட்ட பலம் மற்றும் தேவைகளுக்கு ஏற்ற, பின்வருவன உள்பட சிறப்பு தலையீடுகள் தேவைப்படுகின்றன:

- குறிப்பிட்ட திறன் அறிவுறுத்தல்;
- ஈடுசெய்யும் உத்திகளின் வளர்ச்சி;
- தனக்காய் பேசும் திறன்களின் வளர்ச்சி;
- பொருத்தமான ஏற்பாடுகள்.

மிக முக்கியமாக, குழந்தைகளை ஆரம்பத்திலேயே மதிப்பீடு செய்திடும் வண்ணம், கற்றல் குறைபாட்டைக் கண்டறிவது முக்கியம். மாணவர்கள் தங்களுக்கு தேவைப்படும் திறன்களை முன்னமே வளர்த்துக் கொள்ளவும், தேவையான ஆதரவைப் பெறவும் இது அனுமதிக்கும்.



### எங்களை தொடர்பு கொள்ளவும்

26-5155 Spectrum Way
Mississauga, ON L4W 5A1

தொலைபேசி *(905)272-4100*

தொலைநகல் *(905) 272-4863*

*வலைத்தளம்: WWW.LDAPR.CA*


## LEARNING DISABILITY ASSOCIATION OF PEEL REGION

### மேற்கோள்கள்:


Learning Disabilities Association of Peel. (n.d.). Retrieved from: https://www.ldapr.ca/

Learning Disabilities Association of Ontario. *Myths and Facts about Learning Disabilities.* (n.d.). Retrieved from: http://www.ldao.ca/myths-facts-about-learning-disabilities/

***பரிந்துரைக்கப்பட்ட மேற்கோள்:*** Freire, T. & Singh, N.R. (2020). What You Need to Know About Learning Disabilities. Mississauga, ON: Regional Diversity Roundtable.